நூல் கிடைக்காமல் நெசவாளர் தொல்லை

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (13—5—50) வெளியூர் (14—5—50) [இதழ் 251

தேவையில் பாதி கூட கிடைக்கவில்லையென்று அறிவிப்பு

புழுக்க நிலை மாறி கிராக்கி இப்பொழுது தான் ஏற்பட்டுள்ளது

—(0)—

ஆளவந்தார் உடனே ஆவன செய்ய வேண்டும்

சென்னை, மே 11—

கைத்தறிகளுக்குக் கொடுக்கப்படும் நூல் பாதியாகக் குறைத்துவிட்டதால், கைத்தறி நெசவாளர்கள் மிகவும் கஷ்டமான நிலையை அடைந்துள்ளார்கள். மின்சாரத்தைக் குறைந்துவிட்டதால் தான் நூல் உற்பத்திக் குறைந்துவிட்டதென்று கருதப்படுகிறது.

மற்றும் பாக்கிஸ்தானுக்கு நூல் ஏற்றுமதி செய்ப அனுமதி தந்ததும், நூல் நெருக்கடிக்குக் காரணம என்று கருதப்படுகிறது.

சென்னைமாகாண கூட்டுறவு சங்கத்துக்கு 9256 பேல் நூல் ஒதுக்கப்பட்டுள்ள தென்றும், அதில் 4... வரை வந்து சேர்ந்துள்ள தென்றும் கூறப்படுகிறது

"கைத்தறித் துணிக்கோ அல்லது நூலுக்கோ இப்பொழுதும் மார்க்கெட்டில் மலிவு ஏற்படவில்லை; உயர்ந்த ரக நூலுக்கும், முரட்டு நூலுக்கும் இப்பொழுது கிராக்கி ஏற்பட்டுள்ளது. 40-வது நம்பர் நூல் அதிகமாகத் தேவைப்பட்டுக் கிடைக்கவில்லை; கூட்டுறவு சங்கத்தார்களின் தேவைக்காகச் சில்லரையில் கூட நூல்வாங்கப்படுகிறது கிடைத்துள்ள நூலை வைத்துக் கொண்டு நிலைமையைச் சமாளிப்பது சாத்தியமில்லை" என்று, சென்னை மாகாணக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த தோழர் ஞானசுந்திரம் முதலியார் கூறினர்.

* * *

சென்னை மாகாணத்தில் விவசாயத்துக்கு அடுத்தப்படி, அதிக மக்கள் ஈடுபட்டுள்ள தொழில் கைத்தறி நெசவாகும். நிகரில்லாத நெய்யுந் தொழிலை மேற்கொண்டுள்ள தால், ஆயிரமாயிரம் தொழிலாளிகள் இன்று அரைவயிற்றுக் கஞ்சிககுக்கூட வழியில்லாமல் அவதிப்படுகிருர்கள்

திராவிட நாட்டில் நெய்யபட்ட லுங்கிகளுக்குப் பர்மா, மலேயாவிலும், இப்பொழுது கிழக்குப் பாகிஸ்தானுகிவிட்ட டாக்கா பகுதிகளிலும் நல்ல மதிப்பிருந்தது. அதனால் கைத்தறி நெசவாளிகள் யுத்த காலத்துக்கு முன்பு நிம்மதியான வாழ்க்கை நடத்தி வந்தார்கள். உலகப்போரினல் போக்குவரத்துத் தடை ஏற்பட்டு ரங்கூன் வியாபாரமும், மலேயா வியாபாரமும் துண்டிக்கப்பட்டதால் கைத்தறி ஆடைகள் ஏற்றுமதி செய்யப்படவில்லை. அதனுல் ஏற்பட்ட தேக்கத்தினுல் கைத்தறி நெசவுத் தொழில் பாதிக்கப்பட்டது. போர் முடிவில் கிழ்நாடுகள் வர்த்தகம மீட்கப்பட்டதால் கவலையற்ற வாழ்க்கை நடத்தினுர்கள் நெசவுத் தொழிலாளிகள் இது நீடிக்கவில்லை. லுங்கி உடைகளையே உபயோகிக்கும் டாக்கா பகுதி கிழக்குப் பாக்கிஸ்தானுகப் பிரித்துவி... ...பட்டு விட்டது. இதற்கிடையில் ஜப்பானிய நெசவுத் தொழில் போர்க் காலத்தால் ஏற்பட்ட தொல்லைகளைச் சமாளித்துக் கொண்டு, தெனகிழக்குஆசியா நாடுகளின் வர்த்தகத்தைக் கைப்பற்றிக்கொண்டது. அதனுல் இந்திய கைத்தறி நெசவுத் தொழில் பாதிக்கப்பட்டதிற்கு அளவே இல்லை, பாக்கிஸ்தானுக்குத் துணி ஏற்றுமதி செய்வதைத் தடுத்து, இந்திய அரசாங்கம் பிறப்பித்த உத்திரவை ரத்து செய்யும்படி தொழிலாளர் பிரதிநிதிகள் பலர் தூண்டியும் பலன் கிடைக்கவில்லை,

நெசவுத் தொழிலாளிகள் பலர் பரம்பரைப் பரம்பரையாகச் செய்துவந்த தொழிலை விட்டு, விவசாயத் தொழிலாளராக மாறவேண்டிய அவசியமேற்பட்டது. அதனுல் அவர்கள் அடைந்த அல்லல்கள் சொல்லத் தரமன்று. மழை பெய்யாத காரணத்தால், வற்றுத நதிகள் இருந்தும் பயிர் வானத்தைப்பார்க்க வேண்டிய நிலை இதுவரை போக்கப்படாத காரணத்தால் விவசாயம் பேராபத்துக்குள்ளாகியுள்ளது. நகரங்களில் சென்று ரிக்ஷா இழுத்துப் பிழைக்கலாமென்ற நிலை, விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் நெசவுத் தொழிலாளிகளுக்கு விவசாயம் எவ்வாறு ஆதரவு தர முடியும்?

பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் மீண்டும் நல்லுறவு

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

ரஷியாவைப் புறக்கணிப்பது ஆபத்தானது

உலகம் மேலும் பிளவுண்டு போகும்

—(0)—

முன்னுள் அமெரிக்கத் தலைவரின் யோசனைக்கு அறிஞர்கள் கண்டனர்

நியூயார்க், மே 12—

ஐ. நா. ஸ்தாபனத்திலிருந்து கம்யூனிஸ்டுகளை விலக்கிவிட வேண்டும் என்று, முன்னுள் ... ...ஸ் ஜனுதி ... கருத்து, தீவிர கண்டனத்தை எழுப்பியிருக்கிறது.

கிழக்கும் மேற்கும் ஒன்று சந்தித்துப்பேச ஐ. நா. ஒன்றே தக்க ஸ்தாபனம என்றும், ஆகவே இந்த யோசனை மிகவும் விபரீதமானது என்று ஐ. நா. அதிகாரிகளும், பிரதிநிதிகளும் கூறுகின்றனர்.

ரஷ்யாவும் அதைச் சேர்ந்த நாடுகளும் விலக்கப்பட்டால், உலகம் இப்பொழுது இரண்டு கோஷ்டியாக இருப்பது மூன்று கோஷ்டியாக ஆகிவிடும் என்று அவர்கள் கூறுகின்றனர்.

ஏனெனில், யுனைடெட் ஸ்டேட்ஸை ஆதரிப்பவர்கள் சிலர், ரஷ்யாவை விரோதித்துக்கொள்ள விருப்பமில்லாதிருக்கலாம் என்று இவர்கள் கூறுகிருர்கள்.

ரஷ்யாவும், கிழக்கு ஐரோப்பாவும் ஐ. நா. விலிருந்து விலக்கப்பட்டால், ஒரே உலக ஸ்தாபனம் என்று பின்பு எதுவுமே இராது என்று டிரிகெவ்லை கூறினுர்.

தோழியர் ரூஸ்வெல்ட் கூறுவதாவது:—உலக நாடுகள் ஒன்றுசேர்ந்துபேசவசதி இருந்தால் எப்போதாவது கலந்து பேசி, காரியம்செய்ய வழி ஏற்படும் ரஷ்யர்களின் மிருந்து நான் எவ்வளவோ தெரிந்து கொண்டிருக்கிறேன். அவர்கள் நம்மைத் தாக்கிப் பேசும்போது நம்மை நாமே பரிசிலனை செய்து கொள்ளும்படி செய்கிருர்கள். இதனுல் நாம் ஜனநாயகத்தைப் போற்றிக் காப்பாற்ற முடிகிறது.

ஜெனரல் ரோமுலோ கூறுகையில்:-இப்பொழுது உலகிலுள்ள மனப்பான்மையைத் தான் ஹூவர்யோசனைவெளிப்படுத்துகிறதென்றும், பெரும் வல்லரசுகள் உலகைப் பிளக்க முயல்வதைத் தடுக்க, ஐ. நா. பிளக்கப்படாமல் தடுக்கப்பட வேண்டும் என்றும் கூறினுர்!

ஐ. நா. அமெரிக்க சங்க கௌரவ தலைவர் ஸமனர் வெல்ஸ், தலைவர் ஏகெல்போகர், வில்லியம் எமாஸன் முதலியவர்கள் ஹூவர் யோசனை, அதிர்ச்சியை அளிப்பதாக இருக்கிறது என்றும், இதன்படி நடந்தால் மூன்ருவது உலக யுத்தத்தைத் தடுக்க வழியில்லாதுபோய்விடும் என்றும் கூட்டறிக்கை விட்டிருக்கின்றனர்.

கம்யூனிஸத்தை ஒடுக்க பஸிபிக் உடன்படிக்கை!

நியூஜிலாந்து மந்திரி யோசனை

ஆக்லண்ட், மே 12—

உலகத்தில் பரவிவரும் கம்யூனிஸத்தை அட்லாண்டிக் உடன்படிக்கையினுல் மட்டுமே ஒடுக்கிவிடலாம் என்று நினைப்பது மிகவும் தவறு என்றும், பஸிபிக் ஒப்பந்தம் ஏற்பட்டாகவேண்டியது அவசியம் என்றும், நியூஜிலாந்து அயல்நாட்டு மந்திரி டாயிட்ஜ் ஸிட்னிக்குப் புறப்படு முன் கூறினுர்.

கொழும்பு மாநாட்டில் இதை, தான்வற்புறுத்திபதாகவும், ஆஸ்திரேலியா இதை ஆதரிக்கும் என்றும், யு. எஸ். ஸின் அனுதாபமும் இதற்கு இருப்பதாகவும் இந்த உடன்படிக்கை விஷயமாக காலதாமதம் செய்யக்கூடாதென்றும் அவர் கூறினுர்.

டெக்னிகல் உதவி வேண்டும் என்று இந்தோனேஷ்யா கோருவதை உடனே கொடுத்தாகவேண்டும் இந்தியாவில் திறமையான தலைவர்கள் இருக்கின்றனர் என்றும், போதிய உதவி அளித்தால் இந்தோனேஷ்யா திறமையான கம்யூனிஸ்டு எதிர்ப்பு நாடாக ஆகும் என்றும் அவர் கூறினுர்.

—ருளோப்

இந்தோ-சீனுவுக்கு $2\frac{1}{4}$ கோடி டாலர்

விரைவில் யு. எஸ். அளிக்கவிருக்கும் உதவி

லண்டன், மே 12—

இப்பொழுது போட்டுள்ள திட்டப்படி அடுத்த 15 மாதங்களில் $2\frac{1}{4}$ கோடி டாலர் யுனைடெட் ஸ்டேட்ஸிடமிருந்து கிடைக்க விருக்கிறது.

தென்கிழக்கு ஆசியாவுக்கு திட்டத்தட்ட $6\frac{1}{4}$ கோடி டாலர் உதவிக்காக காங்கிரஸ் அனுமதி பெறப்பட்டிருக்கிறது என்றும், இந்தோ-சீனுவுக்கு, கொடுத்தது போக பர்மா ஸயாம், மலேயா இவைகளுக்கு அளிக்கப்படும். தென் கிழக்கு ஆசியா விஷயமாக ஐக்ய முன்னணி ஏற்படுத்துவது குறித்து பிரிட்டன், யுனைடெட் ஸ்டேட்ஸ், இவைகளுக்கிடையே தீவிரமாக மூவல்லரசு மாநாட்டில் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அமெரிக்கா விரும்பியபடி வியட்னும், கம்போடியா, லாஸ் இவைகளுக்கு அதிக சுதந்திரம் தர, பிரான்ஸ் சம்மதித்திருப்பதாக நம்பப்படுகிறது.

மாலை மணி

சென்னை 13—5—50 சனிக்கிழமை

அடிப்படையே தவறு

பற்றும் பாசமும் உள்ள இடத்தில் குற்றங்குறைகள் இருந்தால், அவை கண்ணுக்குத் தெரியாது தெரிந்தாலும் ஒப்புக்கொள்ள மனம் இடந்தராது. இது சாதாரண மனிதர்களின் அனுபவத்தில் காணப்படும் உண்மை. ஆனால், அறிவுடையோர் நிலை அஃதன்று. விருப்புவெறுப்பு அற்ற உண்மை நிலையைக் காண விழைவதும், குற்றங் கண்டவிடத்து கண்டிப்பதும் பயன்படாது, திருத்தமுடியாது என்று கண்டபோது, அதனை நீக்கி ஆக்கவேலையில் ஈடுபடுதலே அவர்தம் செயல்.

இத்தகைய பண்பாட்டிற்கும், நமது காங்கிரஸ்காரர்களுக்கும் வெகுதூரம்! காலம் எவ்வளவு வேகமாக மாறினாலும் சரி, அதற்கேற்படைப்பது என்பது அவர்களுடைய அகராதியிலேயே கிடையாது. இருக்கின்ற ஊழல்களுக்கெல்லாம் எத்தகைய முலாம்' பூசுவது. காங்கிரஸ் சர்க்காரின் கவைக்குதவாத பணிகளுக்கு-திறமையின்மைக்கும் எப்படிச் சப்பைக்கட்டு கட்டுவது என்பனவற்றில் அவர்களுக்கிருக்கும் ஆர்வம், நாட்டைச் சீர்திருத்துவதிலோ, நாட்டிலே நல்லாட்சி நிலவச் செய்வதிலோ, மக்களை மக்களாக வாழச் செய்வதிலோ இருப்பதே இல்லை.

அன்றிருந்த சூழ்நிலை, காங்கிரஸ்காரர்களைப் பதவியில் இருக்கச் செய்துவிட்டது. இன்று அந்தப் பதவியை எங்ஙனம் காப்பாற்றிக்கொள்வது என்பதைத்தவிர, அப்பதவியால் உருப்படியான பயன் விளைக்கும் எண்ணம் காங்கிரஸ்காரர்களுக்குக் கொஞ்சமும் இல்லை.

அரசியல் பதவி என்பது தமக்குக் கிடைத்த பரிசு என்று எண்ணுகின்றனரே யன்றி, அது மக்களை மக்களாக வாழச் செய்யும் ஒரு மகத்தான சாதனம் என்ற எண்ணமே அவர்களுக்கிருப்பதில்லை.

நாட்டுமக்களுக்கு நாங்களே வழிகாட்டிகள் என்று பறைசாற்றித்திரியும் இப்புண்ணியர்களின் ஆட்சியில் தான், நாளுக்குநாள் நாடு நலிவுற்று வருகிறது. ஏன் இந்த நிலை, இதில் மாற்றம் காணவேண்டாமா என்று மாற்றுக்கட்சியினரோ, பிறரோ கேட்டால், கேட்பவர் மீது சீறிப் பாய்கின்றனர், கேள்வி சற்று அழுத்தமாக இருந்தால் கம்யூனிஸ்ட் என்றபட்டம் சூட்டி, அவர்களைச் சிறைக்கனுப்பப்பார்க்கின்றனர். அரசியல் என்பது ஏதோ கிள்ளுக் கீரையாகத் தோன்றுகிறது போலும் இவர்களுக்கு!

இதிலென்ன ஆச்சர்யம், காங்கிரசார் போக்கும், காங்கிரஸ் அட்சியாளரின் ஆர்ப்பாட்டங்களும். தெரிந்ததேதானே, அதற்கேன் [illegible]த்துணை விளக்கம் எனக்கேட்கத்தோன்றும் தோழர்கட்கு.

ஆம், கேட்கவேண்டிய கேள்விதான்; இக்கேள்விக்கு விடைதருமுன் அனைத்திந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் தோழர் காளா வெங்கட்ராவ், அண்மையில் பாலக்காடு நகர காங்கிரஸ் குழுக்கூட்டத்தில் பேசியபோது குறிப்பிட்டிருக்கும் வாசகங்களை அன்பர்களின் கவனத்துக்குக்கொண்டு வர விரும்புகிறோம். இதோ அவர் கூறுகிறார்:—

" சர்க்காரை குறை கூறுவதால் மட்டுமே உணவுப் பிரச்னையும் மற்றப் பிரச்னைகளும் தீர்ந்துவிடா. மக்களுடைய தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய சர்க்காரிடம் எந்த விதமான மந்திரஜால வித்தையும் கிடையாது "

தோழர் காளாவின் இந்த உரை காங்கிரஸ் ஆட்சியாளரின்கையாலாகாதத்தனத்துக்கு ஓர் எடுத்துக்காட்டு என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

மக்களிடம் ஓட்டுப் பெற்று, மக்களுக்காக ஆட்சி நடத்த ஆட்சிப்பீடமேறிய காங்கிரஸ் ஆட்சியாளரால், மக்களுடைய தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்யும் ஆற்றல் இல்லை என்பதும், அங்ஙனம் மக்களுடைய தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்ய மந்திர வித்தை இவர்களுக்குத் தேவைப்படுகிறது என்பது இப்போதுதான் தெரியவருகிறது!

தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய 'மந்திர சக்தி' இல்லையாம் சர்க்காரிடம்! ஆகவே அனைத்துக்கும் ஆட்சியாளரைக் குறைகூறிப் பயனில்லையாம். வெட்கம்! வெட்கம்!!

நாடாளும் கட்சியின் பொதுச் செயலாளரே இப்படிப்பட்ட பேச்சு பேசுகிறார் எனில், காங்கிரஸ் இளைஞர்கள் வெட்கித் தலைகுனிவதைத் தவிர, வேறொன்றும் செய்ய வழியில்லை.

நாட்டு மக்களின் வாழ்வே ஆட்சியாளர்கையில்தான் இருக்கிறது அதிலும் இன்று நடப்பது மக்களாட்சி. மக்களாட்சியில் மக்கள், அனைத்துக்கும் ஆட்சி முறையை நம்பித்தான் இருப்பார்கள். அதிலும் இக்கால நிலையில் அரசியல் தனி மனிதனின் வாழ்க்கையோடு இரண்டறப் பின்னிக் கிடக்கிறது அரசியல் சரியாக இல்லையெனில் மக்களின்வாழ்வும் சிறக்காது. இவ்வுண்மையை ஆட்சியாளர் உணரவேண்டும். உணர்ந்து அதற்கேற்ப பொறுப்பையும், கவலையும் மேற்கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் மக்களின் தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய இயலும்.

இதை விடுத்து எல்லாத் தேவைகளையும் சர்க்கரே பூர்த்தி செய்ய முடியுமா என்ற கேள்வியை எழுப்புவது தகாது இக்கேள்வியே தவறு. தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்ய முடியுமா, முடியாதா என்பதல்ல பிரச்னை; அப்படிச் செய்யவேண்டுவது அவசியமா, இல்லையா என்பதுதான் பிரச்னை. அவசியம் உணரப்பட்டால் முடியாமை தானாக மறைந்துவிடும்; அதுமட்டுமல்ல, அங்ஙனம் எல்லாப் பொறுப்பையும் ஏற்று எல்லாத் தேவைகளையும் ஈடு செய்யமுடியாத ஆட்சிமுறை, சரியான ஆட்சிமுறையுமாகாது. அப்படிப்பட்ட ஆட்சி வேண்டாத ஆட்சி—நீக்கப்படவேண்டிய ஆட்சி என்றுதான் கொள்ளவேண்டும்.

தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய ஆட்சியாளருக்கு 'மந்திரசக்தி' என்னும் அதிகப்படியான ஒரு கல்வி தேவை என்று கருதுகிறார் போலும் தோழர்காளா. காளாவின் கருத்து இக் காலத்திற்கு ஒவ்வாதது 'மந்திரத்தின் துணை' நாடிதான் ஆட்சியாளர், மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய முடியுமென்றால், அப்படிப்பட்ட ஆட்சியாளர், இக்காலத்துக்கு ஏற்றவர்களாகஆகமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களை மந்திரிப்பதவியில்வைத்திருந்து பயன் என்ன? இக்காலத்தில் மந்திரிகள்தான் தேவையே யன்றி, மந்திரவாதிகளல்ல!

மக்களுடைய தேவைகளனைத்தையும் பூர்த்தி செய்ய முடியாதென்றால், ஏன் முடியாது? முடியும்படி செய்யாத சர்க்கார், சர்க்காராகுமா? அப்படிப்பட்ட ஆட்சி, மக்கள் ஆட்சியாகுமா? [illegible] உதவாத ஆ[illegible] என்ற வினாக்கள் எழும்.

சர்க்காரைக் குறை கூறுவது காளாவுக்குப் பிடிக்கவில்லையாம் இதற்கு யார் என்ன செய்ய முடியும்? குறைகள் குமுறல்களாக மாறாமலிருக்கின்றவரையில், காளாக்கள் திருப்தியுறவேண்டுமே யன்றி, குறைகூறுவோர் மீது குறை கூறிப் பயனென்ன?

எனவே; காளாவின் வாதம், கவைக்குதவா வாதம்—கருத்தற்ற வாதம்-காலத்துக்கு ஒவ்வாத வாதம். வாதத்தின் அடிப்படையே தவறு.

லெபனானுக்குப் பெண் நீதிபதிகள்

பீரட், மே 12—

லெபனீஸ் பெண்களை நீதிபதிகள் பதவிக்கும் நியமிக்க வேண்டும் என்ற நிபந்தனையை லெபனீஸ் பார்லிமெண்டில், அயல்நாட்டு மந்திரியாக இருந்த ஹமீத் பிராங்கையா ஒரு யோசனையைக் கூறினார்.

நர்ஸுகளாக லெபனீஸ் பெண்கள் அற்புதமாக சேவை செய்து வந்திருக்கின்றனர் என்றும், ஆகவே அவர்களை இத்துறையிலும் சேவை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று அவர் கோரினார்.

இதற்கு லெபனீஸ் பிரதமர் ரியாட்பே ஸல்லோலே பதிலளிக்கையில், இத்தகைய யோசனையை ஆலோசிக்க அரசினால், இதற்கு யமைக்கவேண்டும் என்றும், பெண்களுக்கு இத்தகைய வேலை கொடுத்து கௌரவிப்பதில் தனக்கு எவ்வித தடையுமில்லை என்று கூறினார்.

இருக்க இடமின்றி தவிக்கின்றனர் இந்தியர்

தென் ஆப்பிரிக்க இந்திய பாதிரி சிகாமணி வெளியிடும் தகவல்

ஜோஹென்னஸ்பார்க், மே 12—

கைத்தொழில் அபிவிருத்திக்கான தொழிற்சாலைகள் கட்டுவதாகக்கூறி, அநேக இந்தியர்கள் ஜோஹென்னஸ் பார்க்கில் விரட்டப்படுகிறார்கள் என்றும் டேர்ன்பான்டீனில் இது மிகவும் அதிகரித்திருப்பதாகவும் ஆங்கிலிகன் பாதிரி சிகாமணி குளோப் நிருபரிடம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—அடுத்த இரண்டு மாதங்களில் சுமார் 200 இந்தியர்கள் வெளியேற்றப்படவிருக்கின்றனர். இவர்கள் இப்பொழுதுள்ள வீடுகள் மிகவும்மோசமான நிலமையில் இருக்கின்றன.

வெளியேற்றப்பட்ட இந்தியர் தங்கள் நண்பர்கள், அனுதாபிகள் வீட்டில் தங்கியிருக்கின்றனர். நானே மூன்று அறைகள் வைத்துக்கொண்டிருக்கிறேன். என்னுடன் 12 இந்தியர்கள் வேறு தங்க இடமின்றி தங்கியிருக்கின்றனர்.

மாஸ்கோவில் ட்ரிக்வி-லி

மாஸ்கோ, மே 11—

ஐக்கியநாட்டு ஸ்தாபன முதல் செயலாளர் தோழர் ட்ரிக்வி-லி, இன்றிரவு பிராகாவிலிருந்து விமான மூலம் மாஸ்கோ வந்து சேர்ந்தார்.

சோவியத் உதவி அயல் [illegible] ன்ட்ரிச் [illegible] தில் ட்ரிக்வ்—லைக்கு வரவேற்பளித்தார்.

ஸிரியாவுக்கு ஸோவியத் ஆயுத உதவி

டமாஸ்கஸ், மே 12—

ஸிரிய சர்க்கார் தனக்கு வேண்டிய ஆயுத உதவிகளை ரஷ்யா, அல்லது ரஷ்ய ஆதிக்கமுள்ள நாடுகளிலிருந்து ஏற்றுக்கொள்ளும்படி ரஷ்யா அழைத்திருப்பதாகத் தெரிகிறது.

ஸிரிய ஜவுளிகளைப் பெற்றுக்கொண்டு, ஆயுதங்களைத் தரும்படி ஏற்பாடு செய்து தருவதாக டமாஸ்கஸிலுள்ள ஸோவியத் ஸ்தானிகர் எம்ஸோலோட் சொல்லியிருப்பதாகத் தெரிகிறது.

பிரிட்டிஷ் கடற்படை ஒத்திகை

கோபன்ஹேகன், மே. 12—

ஸ்காண்டினேவிய கடலில் ஜூலை மாதத்தில் பிரிட்டிஷ் கடற்படை யூனிட்டுகள் ஒத்திகை நடத்துமென கோபன்ஹேகன் பத்திரிகைகள் கூறுகின்றன

இன்னும் டென்மார்க்கிற்கு இது பற்றி உத்யோகபூர்வமான தகவல் அறிவிக்கப்படவில்லை.

சர்வதேச வழக்கறிஞர் மாநாடு

டமாஸ்கஸ், மே. 12—

சர்வதேச வக்கீல்கள் மாநாடு லண்டனில் செப்டம்பர் மாதத்தில் நடைபெறவிருக்கிறது. 10 ஸிரிய வக்கீல்கள் இதில் கலந்துகொள்வர்.

பீரட், மே. 12—

ஸிரிய யூதர்களை இஸ்ரேலுக்குக் கடத்திச்செல்லும் ஒரு கோஷ்டியை லெபனீன் போலீஸார் கைது [illegible] குலர் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டார்.

தரிசு நிலங்கள் மிகுதியாகவுள்ள நாடுகள்

இந்தியாவுக்கு மூன்றாவது பரிசு!

நியூயார்க், மே. 12—

உலகிலேயே பண்படுத்தப்படாத தரிசு நிலங்கள், மிக அதிகமாகவுள்ளது முதலில் கனடாவென்றும், பின்னர் எதியோபியாவென்றும், மூன்றாவது இந்தியா, நான்காவது பர்ஸியர் ஐந்தாவது அமெரிக்கா என்று உணவு விஷயமாக உலக புள்ளி விவரங்களைத் தரும் வெளியீட்டில் கூறப்பட்டிருக்கிறது.

இதுவரைப் பயன்படுத்தாத தரிசு நில பரப்பு உலகிலேயே 379000,000 ஹெக்டரஸ் என்று கூறப்படுகிறது.

(ஹெக்டரஸ் என்பது 2·47 ஏக்கர்கள)

இதன்படி கனடாவில் 83632000 ஹெக்டரஸ்ஸும், எதியோபியாவில் 64000'00ம், இந்தியாவில் 56253000ம், பர்ஸியாவில் 40660000ம். யுனைடெட் ஸ்டேட்ஸில் 32374000 ஹெகடரஸும் இருக்கின்றனவாம்.

எதியோபியாவில் முழு நிலப் பரப்பில் 60 சதவீதம் இப்பொழுதும் பலன் தரக்கூடிய பிரதேசங்கள் இருக்கின்றனவென்று அப்பிரசுரத்தில் கூறப்பட்டிருக்கிறது

போர்ச்சுகலில் 30 சதவீதம் நிலமும். இந்தியாவில் 22 சதவீதம் நிலமும் பலன்தாக்கூடியது இன்னும் பயன்படுத்தப்படாமல் இருப்பதாக அந்த வெளியீட்டில் கூறப்பட்டிருக்கிறது.

மூவர் மாநாட்டு விவாதம்

லண்டன், மே 12—

மூவல்லரசு அயல்நாட்டு மந்திரிகள் கூட்டம் முடிவடைந்ததின், முக்யமான அறிக்கை ஒன்று வெளியிடப்படலாம் என்று தெரியவருகிறது. மேற்கு ஜெர்மனி விஷயமாக ஆலோசிக்கப்பட்டதென்றும், மேற்கு நாடுகளுடன் மேற்கு ஜெர்மனி அதிகமாக இணைந்திருக்க வேண்டும் என்றும் தெரிகிறது.

அட்லாண்டிக் உடன்படிக்கை விஷயத்தில் ராணுவ உதவி அம்சம் மேற்கு ஜெர்மனி விஷயத்தில் இப்பொழுது பொருத்தப்படாது என்றும், ஆனால் யுத கௌன்ஸில் மேற்கு ஜெர்மனி மெம்பராகி, மேற்கு நாடுகளுக்கு முடிந்த உதவியைச் செய்யவேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டதாகத் தெரிகிறது.

ஆஸ்திரேலியாவில் ஏராள உரேனியம்

லண்டன், மே. 12—

தென் ஆஸ்திரேலியாவில் உரேனியம் ஏராளமாக அகப்படுகிறதென்றும், இப்பிரதேசமான ரேடியம் ஹில்லில், இக்க உரேனியம் எடுப்பதற்கான 50,000 பெறுமான இயந்திரம் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது.

சண்முகானந்த நூல் நிலைய வெள்ளி விழா

கலைவாணர் என். எஸ். கே. ஆற்றிய தலைமையுரையின் சுருக்கம்

[9-5-50-ல் இராயபுரம்-மருங்கர் சண்முகானந்த புத்தகாலய வெள்ளி விழாவில் நிகழ்த்தப்பட்ட தலைமையுரை]

"ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு" என்பது வள்ளுவர் வாக்கு. அந்த "அறிவாளன் திரு" என்று குறிப்பிட்டது, புத்தகசாலையைத்தான் என்று நினைக்கிறேன்! அறிவு 'விடாயைத்' தணிக்கும் "ஊருணி புத்தகாலயமே" என்று உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உயிர் வாழ்வுக்கு உண்ணீர் இன்றியமையாமைபோல அறிவு வளர்ச்சிக்கு புத்தகாலயம் ஒவ்வொரு ஊருக்கும் தேவை.

மனிதன் வாழும் அமைகளை அமைத்துக்கொண்டே வருகிறான். உணவு உடைகளுக்குத் தொழிலைச் செய்கிறான். மழை, வெயில் முதலிய இயற்கையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள வீட்டைக் கட்டிக்கொண்டான். வீட்டில் உணவு சமைக்க, உறங்க, உறவாட இடங்களை வகுத்துக்கொண்டான். கண்ணுக்கு இன்பமான சித்திரங்களைத் தீட்டினான். செடிகளை, கொடிகளை வளர்த்தான். செவிக்கு உணவான ரேடியோ, கிராமபோன் இன்னும் இசைக் கருவிகளைத் தேடி வைத்துக்கொண்டான். ஆனால் ஒன்று மட்டும் செய்கிறானில்லை. அறிவுக்குணவு தரும் நூல் நிலையம் ஒன்று அமைத்துக் கொள்ளவில்லை. அறிவுமட்டும் பட்டினி கிடக்குமானால் அவன் வாழ்க்கை என்னவாகும்? மக்களைப் பண்பு என்னவாகும்? நாடு என்னவாகும்? வாழ்க்கையில் வெற்றிகாண விரும்பும் ஒவ்வொருவரும் படிப்பகத் [illegible] அனுட்டான[illegible] கொண்டேவாக வேண்டும். மூளையில்லாத மனிதனைப் போன்றது தான், நல்ல நூல்கள் இல்லாத வீடும். 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்று நாம் படித்திருக்கிறோம். இப்போது ஆறு இல்லாமலும் அழகாய் வாழ முடியும், குழாய் வந்துவிட்டது. "நூல் நிலையமில்லா ஊருக்கு அறிவுபாழ்" என்று இப்பொழுது நாம் திருத்திப் படித்துக்கொள்ள வேண்டும். திருக்குறளும், அகராதியும், கதா நூல்களும், விவசாய நூல்களில் சிலவும், வாழ்க்கை நூல்களும், விஞ்ஞானத் தெளிவு நூல்களும் இல்லாத ஒரு வீடு, ஒளியில்லாத வீடேயாகும். வீட்டுக்கு ஒளி தருவது நூல்.

ஒவ்வொரு வீடும் வாசகசாலையானால் பொது வாசகசாலைக்கு என்ன தேவை? என்ற கேள்வி எழலாம். வீட்டு வாசகசாலை அவனுடைய சொந்த வாழ்வுக்கும் கொள்கைகளுக்கும், தேவைகளுக்கும், நோக்கங்களுக்கும் பொருத்தமானதாக மட்டும்தான் இருக்க முடியும். பொது வாசகசாலை அம்மாதிரியல்ல. படித்துக்கொண்டிருப்போர், பள்ளிப் படிப்பை விட்டவர்கள், முறையான படிப்பைப் பெறமுடியாதவர்கள், பொருள் வசதியில்லாதவர்கள், அனைவரும் ஒன்றாகக் கல்வி கற்கும் கலாநிலையமாகும். பொதுப் புத்தகாலயம் கொள்கையால் கட்டுப்பட்டதல்ல. அதில் ஆஸ்திக நூல்களையும், நாஸ்திக நூல்களையும் படிக்கமுடியும். சைவ வைணவ நூல்களையும் காணமுடியும். எல்லா மத நூல்களுக்கும் அங்கே இடமுண்டு. வைதிகமும், சீர்திருத்தமும் கைகோர்த்து உலவுமிடமும். பழமையும், புதுமையும் போட்டிப் போட்டுக்கொண்டு நிற்கும். மனிதன் பல வேறு கருத்துக்களை ஒருங்கே படித்து அறிவின் தெளிவடைய முடியும்.

பொதுப் புத்தகாலயம், பெருந்தொகை மதிப்புள்ள கலைக் களஞ்சியங்கள் போன்ற நவீன ஆராய்ச்சி நூல்களையும், எல்லா வகை மொழி புதுமை நூல்களையும் கொண்டதாக இருக்கும். இத்தகைய விலையேறிய நூல்களை, தனி மனிதர்கள் வாங்குவது இயலாது.

ரிக்ரியேஷன் கிளப் என்றும், இன்னும் பல பேர்களுள்ள பெயர்களுடன் சில புத்தகாலயங்களும் காணப்படுவதுண்டு. இது நாகரீகம் கொஞ்சும் நவீனர்களின் பொழுதுபோக்கு ஸ்தலமாக காணப்படும். மேனாட்டு நூல்கள், புத்தகங்கள் விளையாட்டுகளால் நிறைந்திருக்கும் இதில் பாமரனுக்கும், பண்டிதர்களுக்கும் இடமே இராது. மேனாட்டவரின் ஆடை அணி, நடை பாவனைகளை மட்டும் காபியடிக்கும் நம்மவர் அவர்களின் கட்டுப்பாட்டையும், பொறுப்புணர்ச்சியையும் பலமாகக் காபியடிக்க முன்வர வேண்டும்.

"எல்லாப்பொருளும் இதன் பாலுள அதன் பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்"—என்று திருக்குறளுக்குப் பெருமை பாடினார் ஒரு புலவர், அதேபோல் எல்லா அறிவுச் செல்வங்களையும் திருக்குறளைப்போல தருவிதம் அமைய வேண்டும், புத்தகாலயங்கள்.

ஒரு சமயம் அவர் சொன்னார், 'ஒரு ஊக்கமுள்ள மனிதன் விடா முயற்சியுடன் தமிழ் நூல்கள் எல்லாவற்றையும் படித்துவிடத் துணிவானேயானால், 8 அல்லது 10 ஆண்டுகளுக்குள்ளாக தமிழின் எல்லையைக் கண்டுவிடக்கூடும். அதே போல் [illegible] ஆங்கிலத்துக்கு, சுமார் 16 ஆண்டுகள் தேவையாக இருக்கும். ஆங்கில நூல் செல்வங்கள் அனைத்தையும் ஒருவன் படித்துவிடுவது என்று தீர்மானம் கொண்டால், அவனுக்குள்ள 100-வயதும் காணாது!—இனியொரு பிறவியும் போதாது. அத்தனை எண்ணிலாத நூல்கள் கடலெனப்பெருகியிருக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

ஊருக்குத் தண்ணீர்த் தேக்கமும், மின்சார நிலையமும், ஆஸ்பத்திரியும், தபால் நிலையமும் எத்தனை இன்றியமையாததோ, அத்தனை இன்றியமையாதது புத்தகாலயமும், நல்ல புத்தகாலயத்தின் வழியாக அறிவு ஓங்குவதுமட்டுமல்ல, இன்னும் பல்துறைகளிலும் மக்களுக்குப்பலன் தரமுடியும். உடற்பயிற்சி நிலையம், கலைப்பயிற்சி நிலையம், குடிசைத் தொழில் நிலையம், பொதுஜன சேவாநிலையம் இவைகளையும் அதனுடன் இணைத்து அவ்வூருக்கே தாயகமாக அது தொண்டாற்ற முடியும்.

இத்தகைய நிலையங்களை ஊர் மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் உயிரினுமினிய சொத்தாகப் போற்றி வளர்க்கவேண்டும். நம் முன்னோர்கள் இவ்வாழ்வானுக்கு 'தர்மத்தை' வழி முறைச் சொன்னையாக விட்டுச் சென்றிருக்கிறார்கள். நம்மிடமிருந்து இன்னும், அன்பும் தயாளமும் விடைபெற்றுவிடவில்லை. அவர்கள் கோவில்களையும், நீர்ச்சுனைகளையும், தண்ணீர் மடங்களையும், சத்திரங்களையும், இன்னும் இது போன்ற எலவற்றையும், செய்து காட்டினர். காலம் மாறக்கண்டுவருகிறோம்— நாம் மாறிக்கொள்ள வேண்டும். பழைய தர்மங்கள் இப்போது பயனற்றுக்கொண்டு வருகின்றன. ஆகவே நாம், காலத்துக்குப் பொருந்த புத்தக நிலையங்களாகவும், கல்விக்கூடங்களாகவும் செய்து நமது பரம்பரை தர்மக் கடமையைத் தவறாமல் நிலைநாட்ட வேண்டும். குழந்தை பிறந்தால் கோவிலுக்கும் மணி வாங்கிக்கட்டுகிறேன் என்று விரதம் செய்வதை மாற்றி "அறிவுக்கண் சேவை எனக்குத்தா, ஆண்டவனே! நான் அறிவு விளக்கு ஏற்றி வைக்கிறேன்" என்று நூல் நிலையத்துக்கு நூல் வாங்கிக்கொடுக்க வேண்டும். முத்தையும், சுப்புவும் பரீட்சை தேறினால் சந்தி விநாயகருக்கு 10 தேங்காயும் இருபது தேங்காயும் விடலையாக போட்டி போட்டு உடைப்பதைவிட்டுவிட்டு பரீட்சையில் தேறினால் எங்கள் ஊர் புத்தகசாலைக்கு 10 ரூபாய்க்கு புத்தகம் வாங்கிக்கொடுப்பேன் என்று சபதம் எடுக்க வேண்டும். ஒரு புத்தக நிலையத்தை நிறுவுவது, அதற்குப் பொருள்கள் வாங்கித் தந்து உதவுவது, இவைகள் வேறு எந்த தருமத்தைவிடவும் மட்டமானவையல்ல. இருவணத்தின்போலும், தன் சொந்தசொத்தாகப் பிடிப்பினின் போதும் நம் ஊருக்குச் செய்யுமான புத்தக நிலையத்திற்கும் ஒரு பங்கு சாதிக்கும் பொருந்த உதவுவதை ஒரு விரதமாகக்கொள்ளவேண்டும்.

பிரிட்டிஷ் போர் மந்திரி மலேயா வருகிறார்

கலகம் ஒடுக்குவதை நேரில் காணவே வருகிறார்

சிங்கப்பூர், மே 12—

மலேயாவில் கம்யூனிஸ்ட் பயங்கரவாதிகள் எப்படித் தருப்புகளால் ஒடுக்கப்படுகின்றனர் என்பதை நேரில் பார்த்து தெரிந்துகொள்ளவே, பிரிட்டிஷ் யுத்த மந்திரி தோழர் ஸ்டிராட்சி இங்கு வருகிறார் என்று கூறப்படுகிறது.

அவர் இம்மாதம் 24-ம் தேதி வந்து சேருகிறார். இரண்டு வாரங்கள் தங்கியிருப்பார் என்று நம்பப்படுகிறது. பின்னர் அவர் ஹாங்காங்கிற்கு வருவார்.

அவருடன் ராணுவ நடவடிக்கை டைரக்டர் மேஜர் ஜெனரல் டென்மன்னும், அந்தரங்கக் காரியதரிசி ரோடியும் வருகின்றனர்.

சாகடிப்பதே நல்லது

லண்டன், மே 12—

வியாதித் தொல்லை சகிக்காமல், மிகவும் அவஸ்தைப்படுபவரை அம்மாதிரி அவஸ்தைப்பட விடுவதைவிட, சாகடிப்பது நல்லதா கெட்டதா என்ற பிரச்னை விஷமமாக, இருதரப்பு அபிப்பிராயங்களும் கூறப்படுகின்றன.

லண்டன் லெயின்ட்பால் மாதா கோவிலின் டீன் டாக்டர் மாத்யூஸ் என்பவர் இதை ஆதரித்து ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

எவ்வளவோ கேஸ்களில் பிழைக்க வைக்க முடியும் என்ற நிலைமையும் ஆபூர்வ மருத்துவதமூலம் பிழைக்க வைக்க முடியும் என்ற நிலைமையும், இருந்தால்கூட இனி நம்பிக்கையில்லை என்ற கேஸ்கள் எவ்வளவோ இருக்கின்றன என்றும் இதில் அவர்கள் வீணே அவதிப்படும்படி விட்டுவைப்பதில் யாருக்கும் நன்மையில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

[illegible]பட்டால் அணுகுண்டு உபயோகிப்பாரும்!

பொகடெல்லோ, மே 10—

அவசியம் ஏற்பட்டால் அணுகுண்டை மீண்டும் உபயோகிக்கத் தயங்கப் போவதில்லையென்று, ஜனாதிபதி ட்ரூமன் இங்கு பேசுகையில் கூறினார். 1944-ல் ஜப்பானுக்கு எதிரிடையாகத்தான் அணுகுண்டு ஹிரோஷிமா நகரைத் தாக்க உபயோகிக்கும்படி ட்ரூமன் உத்திரவிட்டார்.

நூல் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ளது. இதன் விளைவால், புண்பட்ட நெசவுத் தொழிலாளிக்குப் பூச்சு மருந்தாவது கிடைக்குமென்று தான் எண்ணுகிறோம். ஏற்கனவே கைத்தறி ஆடைகளுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஆனால் ஆடை நெய்ய நூல் கிடைத்தால் தானே? ஆளவந்தார் தொழிலாளிகளின் குறைகளைப் போக்க உடனே ஆவன செய்யவேண்டும். பாக்கிஸ்தானுக்கு நூல் ஏற்றுமதி செய்வதைக் கட்டுப்படுத்தி, கைத்தறி ஆடைகளாக அனுப்ப வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்வது சிறந்ததாகும்.

மற்றும் மக்கள் உயிர் வாழ்வுக்கு உணவு, உடையும் தான் மிக முக்கியமானவையாகையால், நீர்ப்பாய்ச்சலுக்கும் நெசவாலைகளுக்கும் மின்சார சக்தி குறைப்பதைவிட, மற்ற ஆடம்பர வாழ்க்கைக்கான பொருள்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளுக்கு நிறுத்திவிடுவதே அறிவுக்கேற்ற செய்கையென்று நாம் கருதுகிறோம்.

கவிஞர் தாகூர் பிறந்த தின விழா

கி. பாக்கிஸ்தானில் கொண்டாட்டம்

டக்கா, மே 12—

"ரவீந்திரநாத் தாகூர் மேற்கு வங்காலத்துக்கு எவ்வளவு சொந்தமோ அவ்வளவு நமக்கும் சொந்தமான கவிஞராவார்" என்று கிழக்குப் பாக்கிஸ்தான் சுகாதார மந்திரி தோழர் ஹபிபுல்லா இங்கு கூறினார்.

கவிஞர் தாகூர் முஸ்லீம்களைப் போலவே சர்வ தேசியம் பேசினாரென்றும், அவர் குறுகிய நோக்கத்தோடு நடந்துகொள்ளவில்லையென்றும், அதனால் அவர் முஸ்லீம்களுக்கு மிகவும் வேண்டியவரென்றும் தோழர் மஹார் கூறினார்.

தாகூர் பிறந்த தின விழா சிறப்பாக டக்காவில் கொண்டாடப்பட்டது.

என். எஸ். கே. பம்பாய் செல்கிறார்

பம்பாய் தமிழ்ச் சங்கத்தினரால் "மாதுங்கா"-வில் கலைவாணர் தோழர் என். எஸ். கிருஷ்ணன், தோழியர் டி. ஏ. மதுரம் இன்னும் அவர்தம் குழுவினரின் நாடகம், கிந்தனார், வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் இம்மாதம் 13, 14 தேதிகளில் நடைபெறும். அதுபோது பல வேறு கழகங்களின் சார்பில் கலைவாணருக்கு வரவேற்பளிக்கப்படும்.

தோழர்கட்கு

கோவையில் மே 27, 28 தேதிகளில் நடக்கும் முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டுக்கு பிரதிநிதிகளாக சேர விரும்பும் தோழர்கள் தங்கள் பெயர், முழு விலாசத்துடன் கீழ்கண்ட முகவரிக்கு 20—5—50 தேதிக்குள் எழுதும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆர். ஆதிசிவம்,
8/20 ஜெயில்ரோடு, ஸ்டார் பில்டிங்
கோயமுத்தூர்.

இனி நடப்பவை

சென்னை:—மக்கள் மறுமலர்ச்சி மன்றத்தின் சார்பில், தோழர் பால்வண்ணர் 'திருக்குறளில்—வாய்மை' என்பது பற்றிச் சூளை, வாத்தியார் கந்தப்பிள்ளைத் தெரு, நகராண்மைக் கழகப் பள்ளியில் 14-5-50 காலை 10 மணிக்குப் பேசுவார்.

* * *

சென்னை:—இந்திய மக்கள் கழகத்தின் சார்பில், 14-5-50 அன்று காலை 10 மணிக்கு, சிந்தாதிரிப்பேட்டை 28 வெங்கடேச கிராமணித் தெருவிலுள்ள கழகக் கட்டிடத்தில் 'இந்தோ-பாக் உடன்படிக்கை' என்ற தலைப்பில் மலர் பேசுவர்.

* * *

சென்னை:—சென்னைத் திருவள்ளுவர் கழகத்தின் சார்பில், பேராசிரியர் தோழர் அ. கி. பரந்தாமனார் எம். ஏ. அவர்கள், புரசை, வைக்கோல்காரன் தெரு, நகராண்மைக் கழகப் பள்ளியில் "திருக்குறளில்—கேள்வி" என்பது பற்றி 14—5—50 ஞாயிறு மாலை 6-30 மணிக்குப் பேசுவார்.

* * *

சென்னை, திருவல்லிக்கேணி:—வ. உ. சி. இளைஞர் மன்றத்தின் சொற்பயிற்சிக் கூட்டம் 14-5-50 காலை 10-மணிக்கு தோழர் வி. எஸ். பார்த்தசாரதி தலைமையில் நடைபெறும். அதுபோது 'கவிஞர் பாரதியார்' என்னும் பொருள் பற்றி பல தோழர்கள் சொற்பொழிவாற்றுவார்கள். இடம்:—நெ. 3, குயப அருணகிரி முதல் தெரு.

* * *

சென்னை:—சென்னை சித்த வைத்திய சங்கத்தின் ஆதரவில் 14-5-50 மாலை 6 மணிக்குச் சென்னை ஓட்டேரி படவேட்டம்மன் கோவில் தெரு, நகராட்சி மன்ற ஆண்பாடசாலையில் தோழர் க. விசுவலிங்கன் தலைமையில், ராங்கடையாக உலகஞ்சுற்றிவரும் தமிழன் டி. கே. இராஜகோபால் அவர்களைப் பாராட்டிப் பணிசேவ வழியனுப்புவார்கள்.

* * *

விருதுநகர்:—தி. மு. க. சார்பாக 14—5—50 மாலை 7 மணிக்கு ஜூபிளிடவுன் மைதானத்தில், தோழியர் சத்தியவல்லி அம்மையார் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மு. இளஞ்செழியன், இரா. பெருங்கடுங்கோ, எஸ். முத்து ஆகியோர் பேசுவார்கள்.

* * *

செம்பனார்கோவில்:— 17-5-50 மாலை 5-மணிக்கு தி.மு.க. துவக்க விழா தோழர் ஆர். பழனிச்சாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. வி. சித்ரா, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

பெங்களூர்:—திருவள்ளுவர் சங்கத்தின் முதலாண்டுவிழா 14-5-50 மாலை 5—30 மணிக்கு இப்ராயிம் சாயபு வீதி, வைசியா ஆண்டவில் நடைபெறும். தோழியர் த. க. நாகம்மாள் எம். ஏ. தலைமைவகிப்பார். தமிழாசிரியர்கள் தோழர்கள் தன். கி. வெங்கடாசலம் எம். ஏ, நடேசமுதலியார் குறளைப் பற்றி சொற்பொழிவாற்றுவர்.

* * *

சண்டக்காரத்தூர்:—தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம் 14-5-50 இரவு 7-30 மணிக்கு, தோழர் கு. நாண்டவன் அவர்களது "பாரதிதாசன் தையல் நிலையத்தில்" கூடும். அதுபோது தலைமைக் கழக கட்டிட நிதி வசூல்செய்வதும், புது மீர்வாகிகள் தேர்தல் செய்வதும் ஆலோசிக்கவேண்டியிருப்பதால், பச்சையாபிள்ளை, ஷேரூர், செட்டிமானம் முதலிய ஊர் கழகத் தோழர்கள் யாவரும் தவறாது வந்து கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

14 - 5 - 50

(வேலூர் வேலப்பாடி) :—என். வி. நடராசன்.
புதுவை :—சி. பி. சிற்றரசு,
தூத்துக்குடி :—டி. கே. சீனிவாசன், கே. வி. கே. சாமி, எம். இரத்தினம்.
விருதுநகர் (ஜுப்லிடவுன்) :—கற்பகவல்லி அம்மையார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, உ. இராசம்மாள், மு. இளஞ்செழியன், இரா. நெடுங்கடுங்கோ, எஸ். முத்து.

15 - 5 - 50

சோழநகர் :—பி. எஸ். இளங்கோ, ம. சேரன், கலைச்செல்வி, சாவித்திரி.

மலேயா கலகத்தை ஒடுக்கிவிடுவது சுலபமாம்

சிட்னி, மே 12—
காமன்வெல்த் மாநாட்டு சிட்னியில் கூடு முன் ஆஸ்திரேலிய பிரதமர் மென்ஸீஸுடன் சந்தித்து மலேயா விஷயமாக பேசுவதற்காக மலேயா ஹைகமிஷனர் மால்கம் மாக்டனால்ட் கான்பெர்ரா சென்றிருக்கிறார்.

மலேயாவில் கலகப் படையினருக்கு வெளி உதவி எதுவும் கிடைக்கவில்லை என்றும், இங்கிலாந்திலிருந்து அதிகம் படை வந்ததும் கலகத்தை ஒடுக்கி விடுவது மிகவும் எளிதாக இருப்பதுடன், சீக்கிரமே முடிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

ஜெனரல்களுக்குச் சீட்டு

லண்டன், மே 12—
மேற்கு வல்லரசுகளின் அனுதாபிகள் என்று சந்தேகிக்கப்பட்ட மூன்று ஜெனரல்கள், ஜெக் ராணுவத்திலிருந்து டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கின்றனர் என்று 'டெய்லி மெயில்' கூறுகிறது.

யூத மக்கள் தொகை

அம்மான், மே 12—
இஸ்ரேலில் வசிக்கும் 12,21,105 மக்களில் 10,42,021 பேர் யூதர்கள் என்று, சமீபத்தில் எடுக்கப்பட்ட ஜன சங்கிலை விவரத்திலிருந்து தெரிகிறது. யூதர்கள் வசமுள்ள நிலங்கள் 205, 94 000 ஏகர் என்று தெரிகிறது.

பெர்லின், மே 12—
பெர்லினுள்ள ஐஸ் தயாரிக்கும் இயந்திரம் ஒன்றை, வெளியே அனுப்பக் கூடாது என்று ரஷ்ய காவலாளிகள் தடை செய்திருக்கின்றனர்.

பிரேக்-செப் விமான சர்வீஸ் ஒத்திவைப்பு

வியன்னா, மே. 12—
பிரேக்கிற்கும்-செப் என்ற இடத்திற்கும் ஏற்படுத்தப்படவிருந்த விமான சர்வீஸ், ஏதோ சில 'டெக்னிகல்' காரணத்தினால் ஒத்தி வைக்கப்பட்டுவிட்டது.

வீதிகள் அமைக்க இராக்கின் 10-ஆண்டு திட்டம்

பாக்தாத், மே 12—
நவீன முறைகளில் ரஸ்தாக்களை அமைக்க இராக் 10-ஆண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்திருக்கிறது. இதற்கு 14,000,000 தினார்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

சைப்பிரசில் நூதனபழ உற்பத்தி!

லண்டன், மே 12—
எப்படி வேண்டுமானாலும், உணவுக்காகவோ, கால்நடைத் தீவனத்திற்காகவோ, ஒட்டும் பசைக்காகவோ உபயோகிக்கத்தக்க ஒரு நூதன பழம் சைப்பிரசில் உற்பத்தியாகிறதாம். கரோப் என்ற இப்பழம், லண்டனில் நடைபெறும் பிரிட்டிஷ் சந்தையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கிறது.

தானாகவே 'செக்' எழுதும் இயந்திரமும், ஈக்களை இழுத்துக் கொல்லும் 'மாக்னடிக்' சாதனமும் இக்கண்காட்சியில் வைக்கப்பட்டிருக்கிறதாம். (ஞானோப)

ரஷ்யாவில் யுத்தக் கைதிகள்

லண்டன், மே 12—
ரஷ்யாவில் இன்னும் இருப்பதாகக் கூறப்படும் ஜெர்மன் ஜப்பானிய யுத்தக் கைதிகள் விஷயமாக கவனம் செலுத்தும்படி ஐ. நா. கேட்டுக்கொள்ளப்படலாம் என்று தெரிகிறது. இப்பொழுது ரஷ்யாவில் 1870000 யுத்தக் கைதிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

மேற்கு ஜெர்மன் சான்ஸலர் அடனூர் தயாரிக்கும் இந்த ஜாபிதாவை சோசாகென் ஐ. நாவுக்கு அனுப்பிவைக்கும் என்று தெரிகிறது.

கடலுக்கு கரைகட்டுகின்றனர்

லண்டன், மே 12—
இங்கிலாந்தின் தெற்குக் கடற்கரையில், கடல் பூமியை அரித்துக் கொண்டு முன்னேறி வருவதைத் தடுக்க, 500 மைல் தூரத்திற்கு இரும்புச் சுவர் எழுப்பப்பட்டிருக்கிறது. ஸஸெக்ஸ் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள இச்சுவருக்கு ரூ. 385,54,000 ஆயிற்றாம்.

இது எப்படி எழுப்பப்பட்டிருக்கிறது என்பதை இந்திய எஞ்ஜினியர்கள் சிலர் பார்வையிட்டிருக்கின்றனர்.

ஒரிஸாவின் புதிய முதல் மந்திரி

தோழர் நபா கிருஷ்ண சௌத்ரி தேர்ந்தெடுக்கப்பட்டார்

கட்டக், மே. 11—
தோழர் ஹரிகிருஷ்ணமேத்தாப் மத்திய சர்க்கார் மந்திரியாகி விட்டதால், முன்னுள் மந்திரியாக இருந்த தோழர் நபா கிருஷ்ண சௌத்ரி ஒரிசா சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

தோழர் நபாகிருஷ்ணசௌத்ரி புதிய மந்திரி சபையை நாளை அமைப்பார். மந்திரிகளின் எண்ணிக்கை இதிலிருந்து எட்டாக உயர்த்தி இரண்டு புதியமந்திரிகளை நியமிப்பதைத்தவிர, வேறுமாறுதல் இருக்காதென்று கருதப்படுகிறது.

லெபனீஸ் பிரதமரை கொல்ல சதி

பீரட், மே 12
லெபனீஸ் பிரதமர் ரியாஸ் எஸ்ஸோலேபேயைக் கொல்ல, நடைபெற்ற சதி விஷயமாக நடைபெற்ற புலன் விசாரணை பூர்த்தியடைந்துவிட்டது.

மே 22-ந் தேதியன்று இது சம்பந்தமாக 9 பேர் ராணுவ கோர்ட்டாரால் விசாரிக்கப்படுவர். இந்த 9 எதிரிகள் மீதும் சதிக் குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

கனடா சிவப்பு நதியில் வெள்ளம் அதிகரிப்பு

2 கோடி பவுண்ட் சர்க்கரை நஷ்டம்

ஆட்டவா, மே 12—
கனடாவில் சிவப்புநதியில் இன்னும் வெள்ளம் தணிந்தபாடில்லை. வின்னிபெக்கரின் ஒரு பகுதி அப்படியே மூழ்கிவிட்டது. இந்த வெள்ளத்தால், 2 கோடி பவுண்ட் எடையுள்ள சர்க்கரை நஷ்டமாகியிருக்கிறது.

இலங்கையில் புத்தமத மாநாடு

ரங்கூன், மே 12—
கொழும்புவில் மே 24-ந்தேதி நடைபெறவிருக்கும் பௌத்த மாநாட்டிற்கு மாண்டலே, ஆறு பிரதிநிதிகளை அனுப்பவிருக்கிறது. புத்தமதத்தை மீண்டும் பரவச் செய்வது குறித்து இம்மாநாட்டில் ஆலோசிக்கப்படுமெனத் தெரிகிறது.

இராக் பேரீச்சம்பழ வியாபாரம்

[illegible], மே 12—
இராக் பேரீச்சம்பழ வர்த்தக குழுவினர் ஒன்று, சர்வதேச சந்தையில் கலந்துகொள்வதற்காக, பிரஸ்ஸல்ஸ் சென்றிருக்கிறது இக்குழு பின்னர் பேரீச்சம்பழ வியாபாரத்தை அபிவிருத்தியடையச் செய்யஐரோப் பியநாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்யும்.

'ஆர்மதா' கப்பலை வெளிப்படுத்தும் முயற்சி

லண்டன், மே 12—
ஸ்பானிஷ் 'ஆர்மதா'வைச்சேர்ந்த ஒரு கப்பலில் ஏராளமான தங்கம் இருந்ததென்றும், அது மூழ்கி விட்டதால் அதை வெளிக்கொணர முயற்சிகள் நீண்டகாலமாகவேசெய்யப்பட்டு வந்ததும் தெரிந்த விஷயம். இம்முயற்சிகள் இதுவரை வெற்றிப் பெறவில்லை என்றாலும் இன்னும் கைவிடப்படவில்லை.

மலேயாவில் ராணுவ நடவடிக்கை

மலேயாவில் கலகக்காரர்களை அடியோடு ஒழிக்க, முழுராணுவ நடவடிக்கை அடுத்த மாதம் ஆரம்பமாகும் என்றும், இதில் பல ஆயிரம் பிரிட்டிஷ் கூர்க்காத் துருப்புகள் கலந்துகொள்ளும் என்றும் தெரிகிறது.

இதற்கான திட்டத்தை சமீபம் கமாண்டர் ஜெனரல் ஸர்ஹெரால்ட் பிரிக்ஸ் தயாரித்திருக்கிறார். எங்கும் ராணுவ சட்ட அமுல் கொண்டுவருவதை பற்றி ஆலோசிக்கப்படவில்லை.

கொழும்பில் இக்பால் தினக் கொண்டாட்டம்

நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க ஏற்பாடு

கொழும் ஜாஹிரா கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் இக்பால் சங்கம், இலங்கையின்சரித்திரத்திலேயே முதன் முறையாக, முஸ்லிம் உலகப் பெருங் கவிஞரான டாக்டர் சர் முகம்மது இக்பால் தின விழாவைக் கொண்டாடியிருக்கிறது.

இந்த சங்கத்தை பாகிஸ்தானின் இலங்கை ஹைகமிஷனராக (அப்போது இலங்கைத் தொழில், சமூக சேவை மந்திரி) ஜனாப் டி. பி. ஜாயா திறந்து வைத்தார். சங்க நடவடிக்கைகளில் இக்பால் நூல்களை மொழிபெயர்ப்பது முக்கியமானதொன்றாகும்.

இவ்வாண்டு "இக்பால் தினக்" கொண்டாட்டத்தை யொட்டி, இலங்கை ரேடியோவில், இக்பால் சங்கத் தலைவரான ஜனாப் ஏ. எம். ஏ. அஜீஸ் "இக்பால் இஸ்லாத்தின் விரிவுரையாளர்" என்பது பற்றி ஆங்கிலத்திலும், ஜனாப் எஸ். எம். கமால்தீன் "இக்பாலும், கல்வியும்" என்பதைப் பற்றித் தமிழிலும் பேசினர். சங்கத்தைச் சேர்ந்த சில அங்கத்தினர்கள்கவிஞரின் சில பாடல்களையும், அவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புகளையும்பாடினர்.

இக்பாலின் சிறந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்க்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதற்காக, சங்கம் பரிசுகள் அளிக்க முன் வந்திருக்கிறது.

அடுத்த ஆண்டு இக்பால் தினக் கொண்டாட்டத்தில் கவி[illegible] நடைபெறும் [illegible]

வின்னிபெக்கில் பெருவெள்ளம்

வின்னிபெக்சாருகிலுள்ள ரெட் (சிவப்பு) நதி, ஸீன் நதிகளில் மேலும் வெள்ளம் அதிகரித்து வருவதால் மேலும் 10,000 பேர்களுக்குமேல் வின்னிபெக்கை விட்டு வெளியேறும்படியோசனை கூறப்பட்டிருக்கின்றனர். மழை இன்னும் விடாமல் பெய்வது பெருங் பீதியை எழுப்பியிருக்கிறது. இருக்கிற நிலைமையில் வின்னிபெக் நகர முழுவதுமே வெள்ளத்தில் மூழ்கிவிடும்போல இருக்கிறது.

வரதாச்சாரியார் 'வாக்குமூலம்'

சமஸ்கிருதத்தால் முக்கியமான பலன் எதுவும் எய்தமுடியாது. அது, உதவாக்கரைமொழி.

பாமர மக்களை அணுகும் அளவுக்கு அதனன்றுமேஇருந்ததில்லை. இனியும் இருக்கப்போவதில்லை.

பிரிட்டனில் கிரேக்கம், லத்தீன் இலக்கியமொழிகளைப்போல, சமஸ்கிருதமும் நாளுக்குநாள் வழக்காதொழிந்தே தீரும்,

என்று வடமொழி நிபுணரும், வருமான வரிபற்றிய ஆய்வுக்குழுவின் தலைவருமான எஸ். வரதாச்சாரியார் பம்பாயில் குறிப்பிட்டுள்ளார்.

சமஸ்கிருதத்தை வானளாவப்புகழும் வக்காலத்தவர்களான நம் மாகாண கல்வி அமைச்சர் சனம் மாதவமேனனும் மற்றும், பல தமிழ் பாடும் பெரிய மனிதர்களும் இதற்கென்ன சொல்லுகிறார்கள்? சொல்லுகிறவர்கள் இவர்களைப் போலல்லாமல், சமஸ்கிருத குலத்திலேயே பிறந்தவர்.

மே நாள் விழாக்கள்

பழனி

பழனி, மே 1—
இவ்வூர் நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பாசறையில் "மே தின விழா" தோழர் பி. எஸ். ஷேக் அவர்கள் தலைமையில், சிறப்புற நடந்தேறியது. அதுபோது மே நாள் விழாவை மேதினியெங்கும் கொண்டாடவேண்டிய அவசியம் பற்றித் தோழர்கள் கா. வெங்கடாசலம், அ. தமிழரசு ஆகியோர் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் விழா இனிது முடிவுற்றது.

• • •

திருவல்லிக்கேணி

சென்னை, மே. 10—
தி. மு. கழகக்கிளையின் சார்பாக மேற்படி விழா 1—5—50 திங்கள் காலை காஞ்சாக் இரண்டாவது தெருவில், தோழர் திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர்கள் வேணுகோபால், சண்முகம், அரசநாதன், துரை, வெங்கடாசலம், சீனிவாசன் கோபால், கணேசன், சீனிவாசன், முத்தானேர் மேதின வரலாற்றை விளக்கி, தி. மு. கழகம் அதைக் கொண்டாடவேண்டியதின் அவசியத்தைக்கூறி, தற்கால அரசியலை விவரித்து, கட்டாய இந்தியை ஒழிக்க நேரடி நடவடிக்கையில் இறங்கவேண்டுமென்று விரிவாகச் சொற்பொழிவாற்றியபின், செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

வாலிபர் முன்னேற்றக் கழகம்

தொண்டமான் நல்லூர், மே 10—
9-5-50 அன்று மாலை இவ்வூர் சத்திரத்தில் வாலிபர்கள் பெரும்பாலோர் கூடி "வாலிபர் முன்னேற்றக் கழகம்" அமைத்தனர். பிறகு கீழ்கண்ட செயற்குழு ஏற்படுத்தப்பட்டது. ராமசாமி தேவர் தலைவர், ப. முத்தையா, த.காவேரி [illegible] கழகத்தின் [illegible] நோக்கம் பற்றிய பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்திற்குத் தோழர் பி. வி. கல்யாணம்தலைமை வகித்தார். தோழர் ப. முத்தையா நன்றி கூறுதுடன், கூட்டம்இனிது முடிவுற்றது.

கொடியேற்று விழா

பழனி, மே 5—
பாசறை திராவிட முன்னேற்றக் கழக நகர உட்கிளையின் சார்பில், தோழர் கே. காளிமுத்து அவர்கள் தலைமையில் "தி. மு. க. கொடியேற்று விழா" சிறப்புறநடந்தேறியது. அதுபோது தோழர் முருகையா நாட்டுப்பண் இசைத்தார். தோழர் ச. ராசகோபால் அவர்கள் கொடியின் தத்துவம் பற்றி விரிவாகப் பேசி, நீண்டநேரம் கம்பத்தில் கொடியை ஏற்றுவித்தார். மற்றும் கழகக் கொள்கைகள் பற்றித் தோழர்கள் அ. தமிழரசு, கா. வெங்கடாசலம், இல. பழனிச்சாமி ஆகியோர் பேசியபின், தோழர் நா. அசன்முகம்மது சொன்னவெந்த இரண்டு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு தோழர் கிருஷ்ணமூர்த்தி நன்றிகூற, விழா இனிது முடிவுற்றது. அதே நேரத்தில் பாசறையின் மற்றொரு பகுதியிலுள்ள தோழர் புலிவாசு இல்லத்தில் மற்றொரு கொடியும் ஏற்றுவிக்கப்பட்டது.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street Madras-1.